**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No.32/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சங்கிலி** | தொழில் | : கிராம நிர்வாக அலுவலர் |
| தகப்பனார் பெயர் | : சங்கிலி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பூலத்தூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 35/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 09.02.2026 |

**( எதிரி A1 ஆஜரில் உள்ளார், எதிரி A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பூலத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி தனசேகரனைத் தெரியும் . 2 வது எதிரியான முத்தம்மாளைத் தெரியாது. நான் 2019 ம் வருடம் காமனூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்த சமயத்தில் தேதி நினைவில்லை. டிசம்பர் மாதம் போல் காமனூர் கிராம ஆள்வரைக்குட்பட்ட பிரியா எஸ்ட்டேட்டில் புள்டோஸ்ரைக் கொண்டு பாறையை உடைத்து வேலை செய்வதாக எனக்கு கிடைத்த தகவலின்பேரில் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் . காலை சுமார் 10.00 மணியளவில் எனக்கு தகவல் கிடைக்கப்பெற்று மதியம் சுமார் 12.00 மணியளவில் மேற்சொன்ன பிரியா எஸ்டேஸ்டட்டிற்கு சென்று பார்த்தபோது சம்பவ இடத்தில் JCB வாகனம் மட்டும் நின்றுகொண்டிருந்து . அதன் பதிவெண் விபரம் தற்போது நினைவில்லை . சம்பவ இடத்தில் பாறைகள் உடைத்ததற்கான அறிகுறிகள் தென்பட்டது. இச்சம்பவம் குறித்து எனது உயர் அதிகாரிகளான கொடைக்கானல் வட்டாச்சியர்

மற்றும் கோட்டாச்சியர் ஆகியோர்களுக்கு தகவல் தெரிவித்தேன். மேற்சொன்ன சம்பவம் குறித்து வருவாய் கோட்டாச்சியர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு அறிவுறுத்தியதன்பேரில் நான் தாண்டிக்குடி காவல் நிலையம் சென்று அனுமதியின்றி எஸ்டேட்டில் JCB வாகனம் கொண்டு வேலை செய்தது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் கொடுத்தேன் . என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் . அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார்மனு **அ.சா.ஆ.1** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

Counsel Mr.Kishore Marshal representing the accused A1 and A2 present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW1 is closed.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.09 17:15:56 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No.32/2025**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ராஜேந்திரன்** | தொழில் | : கார்பெண்டர் |
| தகப்பனார் பெயர் | : அழகர்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : காமனுார் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 62/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 09.02.2026 |

**( எதிரி A1 ஆஜரில் உள்ளார், எதிரி A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் காமனுாரில் வசித்து தச்சு வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளைத் தெரியாது . ஆஜர் எதிரியைத் தெரியாது. அ.சா.1 கிராம நிர்வாக அலுவலர் சங்கிலி என்பவரை எனக்குத் தெரியும் . கடந்த 26.06.2017 வருடம்போல் காமனுாரிலிருந்து மங்களங்கொம்புவிற்கு நானும் , எங்கள் ஊரைச் சேர்ந்த முருகேசனும் நடந்து சென்று கொண்டிருந்தபோது மதியம் 02.00 மணியளவில் வெடிச்சத்தம் கேட்டது. வெடி சத்தம் கேட்டது என்று நான் அ.சா.1 சங்கிலியிடம் தெரிவித்தேன். வெடி சத்தம் பிரியா எஸ்டேட்டில் இருந்து எனக்கு கேட்டது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் , அவர்களிடம் நான் மேற்சொன்ன விபரத்தைதான் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

Counsel Mr.Kishore Marshal representing the accused A1 and A2 present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW1 is closed.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.09 17:16:02 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.32/2025**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **முருகேசன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : மருதையாண்டி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : காமனூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 77/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 09.02.2026 |

**( எதிரி A1 ஆஜரில் உள்ளார், எதிரி A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் காமனூரில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது . தனசேகரன், முத்தம்மாள் ஆகியோர்களைத் தெரியாது . அ.சா.1 சங்கிலியைத் தெரியும். நானும், அ.சா.2 ராஜேந்திரனும் மற்றும் சிலருடன் காமனூரிலிருந்து மங்களங்கொம்புவிற்கு நடந்து சென்று கொண்டிருந்தோம். மதியம் சுமார் 02.00–02.15 மணியளவில் எங்கள் ஊரைத்தாண்டி 10 அடி துாரத்தில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது எங்கள் ஊர் பக்கத்தில் உள்ள பிரியா எஸ்டேட்டில் இருந்து வெடி சத்தம் கேட்டது. வெடி சத்தம் குறித்து நானும், ராஜேந்திரனும் மற்றும் சிலரும் சென்று கிராம நிர்வாக அலுவலர் சங்கிலியிடம் தகவல் தெரிவித்தோம் . இதுபோன்று வெடி வெடிக்காமல் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

Counsel Mr.Kishore Marshal representing the accused A1 and A2 present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW1 is closed.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.09 17:16:07 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.